**செய்தி வெளியீடு எண்–651** **நாள் : 03.08.2010**

**<u>தமிழக முதலமைச்சர் ஆணை</u>**

**<u>சுற்றுலா பாதுகாப்புப் படை (Tourist Security Organization)</u>**

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலாம் இடத்திலும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் பாதுகாப்பான இடமாக இருப்பதாலும், **“விருந்தினர் போற்றுதும்; விருந்தினர் போற்றுதும்”** என்ற திட்டத்தை செயல்படுத்தியதாலும் இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு என்பது ஒரு உலகளாவிய பிரச்சனையாக உள்ளது. சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பில் ஒரு சிறிய அளவு குறைபாடு காணப்பட்டாலும், அது சுற்றுலாப் பயணிகளின் வருகையை மிகப்பெரிய அளவில் பாதிக்கக்கூடிய நிலை உள்ளது.

தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் வருகையை மேலும் அதிகரித்திடும் பொருட்டும், அவ்வாறு வருகை தரும் சுற்றுலாப்பயணிகள் எவ்வித இடையூறும் இன்றி இனிமையாக தமிழக சுற்றுலாப் பகுதிகளை கண்டுகளிக்கும் வண்ணம், அவர்களின் பாதுகாப்பினை அதிகரித்திடும் ஒரு முயற்சியாக, “**சுற்றுலா பாதுகாப்புப் படை**” **(Tourist Security Organization)** என்னும் ஒரு அமைப்பு தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகைதரும் மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி ஆகிய 5 இடங்களில் சுற்றுலா பாதுபாப்புப் படை அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இடத்திற்கும் **1 நிலைய சுற்றுலா காப்பாளர் மற்றும் 5 சுற்றுலாக் காப்பாளர் வீதம், மொத்தம் 5 நிலைய சுற்றுலா**

**காப்பாளர் பணியிடங்களையும், 25 சுற்றுலாக் காப்பாளர் பணியிடங்களையும்** உருவாக்கி தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்காவல் பணியாளர்களின் பணியினை ஒருங்கிணைத்து செயல்படுத்த தலைமை சுற்றுலாக் காவலர் பணியிடம் ஒன்று சென்னை சுற்றுலா இயக்ககத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பணியிடங்களில் முன்னாள் படைவீரர்கள் பணியமர்த்தப்படுவர். இப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்பட்டு இப்பாதுகாப்புப் பிரிவு செயல்படத் தொடங்கும். இப்பிரிவின் செயல்பாட்டினை மதிப்பீடு செய்து மற்ற இடங்களுக்கு விரிவுபடுத்துவது குறித்து அரசு முடிவெடுக்கும். இப்பிரிவு பயணிகளுக்கும், காவல் துறையினருக்கிடையே பாலமாகவும் செயல்பட்டு அவர்கள் பாதுகாப்புப் பிரச்சனைகளைக் களைய உதவும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு போதிய பாதுகாப்பினை வழங்குதல், சுற்றுலாப் பயணிகளின் அச்சத்தினை போக்குதல், சுற்றுலாப் பயணிகளுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் / காவல் துறைக்கும் ஒரு பாலமாக செயல்படுதல், சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமான சுற்றுலாத் தகவல்களை வழங்குதல், அவசர நேரங்களில் அவர்களுக்கு சரியான உதவி புரிதல் போன்ற பணிகளை இச்சுற்றுலா பாதுகாப்புப் படையினர் மேற்கொள்வர். இப்பிரிவின் செயல்பாடு இன்னும் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளைக் கவரவும், ஈர்க்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெ. இறையன்பு,
அரசுச் செயலாளர்

*******

**வெளியீடு–**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**